O.S.No.429/2021 – Date : 23.02.2026

PW1 – பழனிவேல்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு நிரந்தர முகவரி ஈரோடு மாவட்டம் என்றால் சரி. அங்கே எத்தனை வருடமாக குடியிருக்கிறேன் என்றால் 20 வருடமாக குடியிருந்து வருகிறேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் பேக்கரி வைத்திருக்கிறேன். வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் செலுத்தி வருகிறேன். எத்தனை வருடமாக செலுத்தி வருகிறேன் என்றால் 2005ம் வருடம் முதல் வருமான வரி செலுத்தி வருகிறேன். வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் 2010ம் ஆண்டிலிருந்து தற்போது வரை தாக்கல் செய்ய இயலும்.

பிரதிவாதிக்கு கொடுத்த ரூ.10,00,000/– தொகையை வருமான வரி கணக்கில் காட்டி உள்ளேனா என்றால் காட்டி உள்ளேன். பணத்தை ரொக்கமாக கொடுத்தேனா, வங்கி மூலமாக கொடுத்தேனா என்றால் ரொக்கமாக கொடுத்தேன். பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்று நேரடியாக தெரியாது என்றால் அவர் ரயில்வேயில் மினரல் வாட்டர் சப்ளை செய்து வருகிறார். அவருக்கு என்ன சொத்து எங்கே உள்ளதுஎன்று தெரியாது என்றால் நைனாம்பட்டி அரிமா

நகரில் வீடு உள்ளது. அந்த ஒரு வீடு பற்றிதான் எனக்குத் தெரியும். எனது சின்னம்மா மகன் சீனிவாசன் என்பவரை தெரியுமா என்றால் எனக்கு அப்படி யாரையும் தெரியாது, எனக்கு சின்னம்மாவே கிடையாது. நான் எனது வழக்குரையிலும், எனது நிரூபண வாக்குமூலத்திலும் பிரதிவாதியை எத்தனை வருடமாக எந்த வகையில் பழக்கம் என்று நான் சொல்லவில்லை என்றால் சிலவருடமாக தெரியும் என்று சொல்லி உள்ளேன். பிரதிவாதி எந்த விதத்தில் பழக்கம் என்று வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரி.

பிரதிவாதியிடம் நான் எந்தெந்த தேதிகளில் பணம் கேட்டேன் என்று வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரி. ஆனால் கேட்டேன். எனக்கு ராமசாமி மகன் கந்தசாமி என்பவரையும், நஞ்சப்பன் மகன் கமலசேகர் என்பவரையும் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். இவர்களை எத்தனை வருடமாக தெரியும் என்றால் அவர்கள் என்னுடைய அப்பா காலத்திலிருந்தே 40,50 வருடமாக எனது குடும்பத்திற்கு பரிட்சயமானவர்கள். அவர்கள் எங்கே குடியிருக்கிறார்கள் என்றால் கந்தசாமி என்பவர் சிலாங்காடு, கருமாபுரத்திலும், கமலசேகர் தோப்பாங்காடு என்ற ஊரிலும் குடியிருக்கிறார்கள்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.